**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்  நீதித்துறை நடுவர் நீதிமன்றம், எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.**

முன்னிலை : திரு.கோ.விஜயகுமார், B.Sc., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.

2026ம் ஆண்டு   ஜீன் திங்கள்  05 ம் நாள் வெள்ளிக்கிழமை
( திருவள்ளுவராண்டு  2057  பராபவ வருடம், வைகாசி  மாதம் 22 நாள்)

**சுருக்கு வழக்கு எண். 98/2024**

**CNR No.TNED23- 001011 -2024**

அரசுக்காக,
உதவி  ஆய்வாளர்,
மொடக்குறிச்சி  காவல் நிலைய,
குற்ற எண்.206/2021 ..குற்றமுறையீட்டாளர்

//எதிர்//

ஹரிஹரன்  வயது (26)
த/பெ.  சிவாநந்தம்,
94 பாலுசாமி நகர்,
சோலார்,
ஈரோடு மாவட்டம்

...குற்றஞ்சாட்டப்பட்டவர்

| **வரிசை எண்** | **விளக்கம்** | **விவரங்கள்** | |
|---|---|---|---|
| 1. | சம்பவம் நடந்த நாள் | 16.08.2021 | |
| 2. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 17.08.2021 | |
| 3. | எதிரி கைது  செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப் பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 06.09.2021 | காவல் நிலைய பிணையில் சென்ற நாள் 06.09.2021 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | |
| 4. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 11.02.2022 | | |
| 5. | குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 08.06.2023 | | |
| 6. | கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப் பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | -- | | |
| 7. | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 10.02.2026 | 10.02.2026 |
| | | அ.சா.2 | 17.02.2026 | 17.02.2026 |
| | | அ.சா.3 | 17.02.2026 | 17.02.2026 |
| | | அ.சா.4 | 17.02.2026 | 17.02.2026 |
| | | அ.சா.5 | 24.02.2026 | 24.02.2026 |
| | | அ.சா.6 | 07.04.2026 | 07.04.2026 |
| | | அ.சா.7 | 12.05.2026 | 12.05.2026 |
| 8. | எதிரியிடம் குற்றம் குறித்து கு.வி.மு ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய நாள் | 15.05.2026 | | |
| 9. | எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | – இல்லை – | – இல்லை – | |
| 10. | வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள் | 03.06.2026 | | |
| 11. | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 05.06.2026 | | |

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் 13.09.2024ம் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 06,02,2025 தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை–I அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்

திரு.கே.பன்னீர் செல்வம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

கடந்த 16.08.2021ம் தேதி இரவு 20.30 மணிக்கு மொடக்குறிச்சி காவல்நிலையச் சரகம் ஈரோடு – முத்தூர் மெயின் ரோடு சாணார் மேடு V.I.P கார்டன் அருகில் சாட்சி.1 தனது இருசக்கர வாகனம் TN 34 P 8353ல் வடக்கிலிருந்து தெற்குநோக்கிஇடது பக்கமாக சென்றுகொண்டிருந்தபோது அவருக்கு எதிர் திசையில் தெற்கிலிருந்து வடக்குநோக்கி எதிரி தனது TN 33 BP 6757 என்ற பதிவு எண் கொண்ட ROYAL ENFIELD இருசக்கர வாகனத்தை, எதிரிக்கு முன்னால் வந்த பதிவு எண் தெரியாத நான்கு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி முந்திச்சென்று எதிரே தனக்கு இடது பக்கமாக வந்த சாட்சி.1ன் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், மேற்படி விபத்தில் சாட்சி.1க்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாகவும் எதிரி மீது மொடக்குறிச்சி காவல் நிலைய உதவி ஆய்வாளர் இ.த.ச.பிரிவுகள் 279, 338 கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி அறிக்கையை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரி மீது இதச பிரிவு 279, 338 படி வழக்கினை கோப்புக்கு எடுத்துக் கொண்டது.

3. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், குவிமுச பிரிவு 207 வது பிரிவின் படி உள்ளதுமான ஆவணங்க ளின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களைப் பரிசீலனை செய்ததின் பேரில் எதிரி மீது கேள்விகள் வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால், எதிரி

மீது இதச பிரிவு 279, 338ன் படி குற்றம் பற்றி வினவிய போது எதிரி குற்றத்தினை மறுத்துரைத்தார். எனவே வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5. அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ..சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. <u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் பின்வருமாறு:–</u>

(i) அ.சா.1 திரு.குமார் தனது சாட்சியத்தில் கடந்த 16.08.2021 ம் தேதி இரவு 8.00 மணிக்கு சோலாரிலிருந்து TN 34 8353 என்ற தனது பிளன்டர் இருசக்கர வாகனத்தில் லக்காபுரம் வந்து கொண்டிருந்தபோது எதிர்திசையில் நான்கு சக்கர வாகனம் வந்து கொண்டிருந்ததாகவும், அதை சைடு எடுக்கும் போது ராயல் என்பில்டு பைக் வேகமாக வந்து தான் ஓட்டிவந்த பைக்கின் மீது மோதி விபத்து ஏற்பட்டு மேற்படி விபத்தில் தனக்கு தலையில் மண்டை உடைந்தும், தாடை உடைந்தும், வயிற்றில் காயம் ஏற்பட்டும், வலது காலில் காயம் ஏற்பட்டும், வலது கை முட்டியில் காயம் ஏற்பட்டு தனக்கு பலமான அடிபட்டதாகவும், சம்பவ இடத்தில் இருந்த தெரிந்தவர்கள் தன்னை ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது மொடக்குறிச்சி போலீஸார் தன்னிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ல் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், தான் மேல்சிகிச்சைக்காக தங்கள் ஊரில் உள்ள விநாயகா அன்னபூரணா மருத்துவமனையில் மொத்தம் 45 நாட்கள் இருந்து மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொண்டு அறுசை சிகிச்சை செய்து கொண்டதாகவும், மேற்படி விபத்தை ஏற்படுத்திய ராயல் என்பில்டு பைக்கை ஓட்டி வந்தவர் ஹரிஹரன் என்றும், தனக்கு பார்த்தால் அடையாளம் தெரியும் என்றும், இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

(ii) அ.சா.2 திரு.சூர்யா தனது சாட்சியத்தில்தான் கடந்த 16.08.2021ம் தேதி இரவு நேரத்தில் ஹோட்டலில் வேலை செய்துகொண்டிருந்தபோது தங்கள்

ஹோட்டலுக்கு முன்பாக விபத்து நடந்து வெளியே கூட்டமாக இருந்ததாகவும், தங்கள் ரூமுக்கு அருகே ராயல் என்பீல்டு பைக் நின்றுகொண்டிருநத்து என்றும், இரவு எடுக்க முடியவில்லை என்பதால் காலையில் வந்து எடுத்துக்கொள்வதாகச் சொன்னதாகவும் ஆனால் இந்த விபத்து எப்படி நடந்தது யார் காரணம் என்ற விபரம் தனக்கு தெரியாது என்று கூறி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாகியுள்ளார்.

(iii) அ.சா.3 திரு. அக்பர் அலி தனது சாட்சியத்தில் தான் கடந்த 16.08.2021ம் தேதி இரவு 08.30 மணிக்கு AMS பேன்சிகடையான தங்கள் கடையில் இருந்தபோது இரவு 8.30 மணிக்கு தன் கடை முன்பு டமார் என சத்தம் கேட்டு தான் வெளியே வந்து பார்த்தபோதுராயல் எல்பீல்டு பைக்கும், ஸ்பெலண்டர் பைக்கும் ஒன்றுகொன்று மோதி விபத்து ஏற்பட்டது தெரியவந்ததாகவும் மேற்படி இருவருக்குமே பலத்தகாயம் ஏற்பட்டு ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி ஆம்புலன்சில் இருவரையும் சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும் மறுநாள்போலிசார் சம்பவ இடத்திினைப்பார்வையிட்டு பார்வை மகஜர் மாதிரிவரைபடம் தயார் செய்ததாகக் கூறி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாகியுள்ளார்.

(iv) அ.சா.4 திரு.ராஜா தனது சாட்சியத்தில் கடந்த 17.08. 2021 ஆம் தேதி காலை 9.15 மணிக்கு மொடக்குறிச்சி போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து முந்தைய நாள் லக்காபுரம் சாணார் மேட்டில் விஜபி கார்டன் போகும் வழியில் முத்தூர் மெயின் ரோட்டில் ஏற்பட்ட விபத்து சம்பந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்ததாகவும் அதில் தான் சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் முதலாவதாக உள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

(v) அ.சா.5 திரு. பாலாஜி தனது சாட்சியத்தில் தான் தற்போது மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் தனிப்பிரிவு தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 17.08.2021ம் தேதி காலை 6.30 மணிக்கு மொடக்குறிச்சி காவல் நிலையத்தில்

தலைமை காவலராக நிலைய பொறுப்பு அலுவலில் இருந்து போது ஈரோடு அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசனின் பேரில் அங்கு சென்று சிகிச்சையில் இருந்து குமார் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.206/2021 இதச பிரிவு 279, 337 இதச –ன் கீழ் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ3 பதிவு செய்ததாகவும் இது சம்பந்தமாக தன்னை உதவி ஆய்வாளர் விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

(vi) அ.சா.6 திரு.பிரகாசம் தனது சாட்சியத்தில் தான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டதாகவும், கடந்த 2021 ம் ஆண்டு மொடக்குறிச்சி காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது 17.08.2021ம் தேதி மொடக்குறிச்சி காவல் நிலைய தலைமை காவலர் 397 பாலாஜி என்பவர் காவல் நிலைய குற்ற எண். 206/2021, சட்ட பிரிவுகள் 279, 337 இதச ன் கீழ் வழக்கு பதிவு செய்து புலன் விசாரணைக்காக தன்னிடம் ஒப்படைத்த வழக்கு கோப்பினை தான் பெற்று புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கின் சம்பவ இடத்திற்கு சென்றும், சாட்சிகள் ராஜா, ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 தயார் செய்ததாகவும், மேற்படி பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று சாட்சிகள் குமார், சூர்யா, ஜிபேர் அகமது, அக்பர் அலி, காந்திராஜன், ராஜா, ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து சம்பவ நடந்து உண்மை என தெரிந்து எதிரிகளை தேடி வந்த நிலையில் எதிரி ஹரிஹரன் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு நிலையம் ஆஜரானவரை கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் விடுவிக்கப்பட்டு விபத்தில் சம்பந்தப்பட்ட எதிரியின் வாகனமான TN 33 BP 6757 என்ற ராயல் என்பில்டு வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வுக்காக அனுப்பி வைத்து தான் பணி மாறுதலில் சென்றததால் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் திரு.பிரபாகரன் வசம் ஒப்படைத்ததாக சாட்சியமளித்துள்ளார்.

(vii) அ.சா.7 திரு. பிரபாகரன் தனது சாட்சியத்தில் தான் 2023ம் வருடம் மொடக்குறிச்சி காவல் நிலையத்தி உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது கும்பகோணத்தில் குடியிருந்து வருவதாகவும், கடந்த 17.08.2021 ம் தேதி மொடக்குறிச்சி காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது மொடக்குறிச்சி காவல் நிலைய குற்ற எண்.206/2021 சட்ட பிரிவுகள் 279, 337 இதச பிரிவின் கீழ் முதல் புலன் விசாரணை முடித்து தொடர்புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் பிரகாசம் தன்னிடம் ஒப்படைத்த வழக்க கோப்பினை பெற்றுக்கொண்டு ஏற்கனவே விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனமான TN 33 BP 6757 என்ற வாகனத்தை கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்வுக்கு உதவி ஆய்வாளர் பிரகாசம் அனுப்பி வைத்துள்ளார் என்றும், இருசக்கர வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் கதிர்வேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 பெற்றும் பின்பு வழக்கினை தொடர்புலன் விசாரணைக்காக எடுத்துக் கொண்டு அன்றே காயம் பட்ட நபர் ஓட்டி சென்ற TN 34 P 8353 என்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்வுக்காக வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பி வைத்து மோட்டார் வாகன ஆய்வாளர் சிவக்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 பெற்றும் காயம்பட்ட குமாருக்கு சிகிச்சை அளித்த ஈரோடு அரசு மருத்துவமனை மருத்துவர் சோமேஸ்வரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 பெற்றும் மருத்துவர் வழங்கிய காயச்சான்றிதழின் அடிப்படையில் சட்ட பிரிவுகளை 279, 337 இதச பிரிவில் இருந்து 279, 338 ஆக இதச பிரிவாக மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து பின்பு தனது புலன்விசாரணை முடித்து ஆஜர் எதிரி மீது வழக்கின் புலன் விசாரணை முடித்து இதச பிரிவு 279, 338 ன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகச் சாட்சியம் அளித்துள்ளார். அத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

7. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிக்கு பாதகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் வினவிய போது எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளதாகவும் கூறினார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறியதால் எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

8. <u>**தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை :-**</u>

அரசு தரப்பில் எதிரி மீது இதச சட்டப் பிரிவுகள் 279, 338ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தகுநிலை ஐயப்பாட்டிற்கிடமின்றி நிரூபிக்கப் பட்டுள்ளதா என்பதே ஆகும்?

9. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், அ.சா.1 முதல் அ.சா.7ஆகியோர்களின் சாட்சியங்கள், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையான சான்றாவணங்கள் மூலமாக அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, எதிரியை தண்டிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

10. கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் இவ்வழக்கில் சம்பவம் நடந்த இடத்திற்கு அருகிலிருந்த நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றும், விபத்தானது எதிரியின் கவனக் குறைவால் ஏற்படவில்லை என்றும், எனவே எதிரியை இவ்வழக்கில் விடுதலை செய்யவேண்டுமென்று வாதிட்டார்.

12. இவ்வழக்கில் இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கில் புகார்தாரர் அ.சா.1 ஆகவும், சம்பவத்தைக் கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.2, அ.சா.3 ஆகவும், பார்வை மகஜர்

சாட்சியாக அ.சா.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சிறப்பு தலைமை காவலர் அ.சா.5 ஆகவும், முதல் புலன் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் அ.சா.6 ஆகவும், வழக்கை புலன் விசாரணை செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த உதவி ஆய்வாளர் அ.சா.7ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள்.

**13. தீர்வு**

மொடக்குறிச்சி காவல் நிலைய தலைமைக்காவலர் பாலாஜி 17.08.2021ம் தேதி நிலைய அலுவலில் இருந்தபோது ஈரோடு அரசு தலைமை மருத்துவ மமைனயிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் சிக்சையிலிருந்த குமார் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மடி அ.சா.1 குமார் தனது சாட்சியத்தில் 16.08.2021மை தேதி இரவு 8.00 மணிக்கு அ.சா.1க்குச் சொந்தமான TN 34 P 8353 HERO HONDA SPLENDER வாகனத்தில் ஈரோடு டு முத்தூர் மெயின் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்குநோக்கி லக்காபுரம் சாணார் மேடு VIP கார்டன் பிரிவு முன்பு வந்துகொண்டிருந்தபோது பதிவு எண் தெரியாத நான்கு சக்கர வாகனத்தை முந்திக் கொண்டு எதிர் திசையில் இருசக்கர வாகனத்தை ஓட்டியவர் அதிவேகமாகவும்அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து தன் வாகனத்தின் மீதுமு மோதி விபத்தை ஏற்படுத்தியதாகவும் அந்தஇருசக்கர வாகனத்தின் பதிவு எண்.TN 33 BP 6757 என்ற பதிவு எண் கொண்ட ROYAL ENFIELD பைக் அவரது பெயர் ஹரிஹரன் என்றும் தனக்கு வலது கால் முட்டியில் பலத்த ரத்தக்காயமும், முகத்தில் மொக்கை காயம் ஏற்பட்டது என்றும், தன்னை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனையில் சிகிச்சைக்காக தன்னை சேர்த்ததாகவும் புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி அ.சா.1 தனது சாட்சியத்திலும் மேற்கண்டவாறு கூறி மேலும் எதிரியை அடையாளம் காட்டி தனது முதல்விசாரணை சாட்சியத்திலும் சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.1 தனது குறுக்குவிசாரணைச் சாட்சியத்தில் தனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை, வாகனத்திற்கு வாகனப் பதிவு சான்றிதழ் இல்லை என்றும், வாகனத்திற்கு காப்பீடு சான்று இல்லை என்றும்,தலைக் கவசம் அணியவல்லை என்றும், சம்பவம் நடந்த போது யாரும் இல்லை

என்றும் மேலும் அரசு மருத்துவமனையிலிருந்து தன்னிச்சையாக வெளியேறவில்லை என்றும், மறுநாள் தனியார் மருத்துவமனை சென்றதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

14. அதே போல் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட சூர்யா என்பவர் அந்த விபத்து எப்படி நடந்தது விபத்திற்கு யார் காரணம் என்று தெரியாது என்று கூறி அரசுதரப்பில் றிம் சாட்சியாகியுள்ளார். அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்ட அக்பர் அலி **16.08.2021ம் தேதி இரவு 8.30 மணிக்கு தனது கடையின் முன்பு டமார் என்று சத்தம் கேட்டு பார்த்தபோது ராயல் என்பீல்டு பைக்கும், ஸ்பிலண்டர் பைக்கும் ஒன்றுகொன்று மோதி விபத்து ஏற்பட்டது தெரிவந்தது என்றும், மேற்படி இருவருக்கும் பலத்த ரத்தக்காயம் ஏற்பட்டு ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அனுப்பி வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.** அதே போல் அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்ட ராஜா என்பவர் பார்வை மகஜர்மாதிரி வரைபடம் தயார் செய்ததில் கையொப்பம் செய்ததாகச் சாட்சியமளித்துள்ளார். அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்ட பாலாஜி என்பவர் மொடக்குறிச்சி காவல்நிலைய தலைமைக் காவலர் அ.சா.1 இடம் புகாரைப் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்து சாட்சியமளித்துள்ளார். அதே போல் விபத்து நடந்தபோது எந்த நான்கு சக்கர வாகனத்தை முந்திச் சென்று வந்து அ.சா.1ன் மீது மோதியது என்று வாகனத்தின் பெயர் குறிப்பிடப்படவில்லை எனச் சாட்சியமளித்துள்ளார்.

15. இந்த வழக்கில் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்ட வழக்கின் புலன் விசாரணை அதிகாரி பார்வை மகஜர் மாதிரி வரைபடம்தயார் செய்தது குறித்தும் சாட்சிகளை விசாரணை செய்ததுகுறித்தும், எதிரியைக் கைது செய்து விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனங்களை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பியது குறித்தும் சாட்சியமளித்துள்ளார். மேலும்அ.சா.1 ஓட்டி வந்த வாகனத்திற்கு வாகனக் பதிவு சான்றிதழ், காப்பீடு மற்றும் அ.சா.1க்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால்சரிதான் என்றும், புகார்தாரருக்கு எதிரே வந்த 4 சக்கர வாகனம் குறித்த விபரம் தெரிய வரவில்லை என்றும், எதிரிக்கும் விபத்தின் போது காயம் ஏற்பட்டது என்பது குறித்து தெரிந்துகொண்டதாகவும், சம்பவ இடத்திற்கு முன்பு வேகத்தடை உள்ளது என்றும், அது இருட்டான பகுதி என்று குறிப்பிட்டுள்ளதைப் பார்க்கும்போது அ.சா.1க்கு

வாகனத்தை இயக்க சட்டப் பூர்வ தகுதி இல்லாத நிலையில் வாகனத்தை இயக்கியுள்ளது தெரியவருகிறது.

16. அதே போல் வழக்கின் விசாரணை அதிகாரி தனது சாட்சியத்தில் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை பெற்றும், காயச்சான்றிதழ் பெற்று சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் **வழக்கில் சம்பவ இடம் சென்று விசாரணை செய்யவில்லை என்றும் தனியாக மறு வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றும், விபத்து நடந்த இடத்தில் உள்ள சாலை 30 அடி அகலம் உள்ள நிலையில் இருபுறமும் 4 சக்கர வாகனம் செல்லும் வகையில் ரோடு அகலம் உள்ளது என்றும் சாட்சியமளித்துள்ளதைப் பார்க்கும்போது மேற்படி எதிரி வாகன ஓட்டுநர் உரிமம் இல்லாமலும், வாகனத்திற்க பதிவு சான்று இல்லாமலும், அந்த வாகனத்திற்கு காப்பீடு சான்று இல்லாமலும் தாமாக வாகனத்தை இயக்கியுள்ளது தெரிய வருகிறது.** மேலும் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் எவ்வித அறிவிப்பும் இன்றி தாமாக வெளியேறிச் சென்று 17.08.2021ம் தேதி சேலம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்துள்ளது தெரிய வருகிறது. வழக்கின் விசாரணை அதிகாரி அ.சா.1 முதல் உதவி சிகிச்சை பெற்று ஈரோடு அரசு மருத்துவமனையில் விபத்துப் பதிவேட்டு சான்றிழ் கொடுத்த மருத்துவரை சாட்சியாக இந்த வழக்கில் விசாரணை செய்யவில்லை என்பது தெரியவருகிறது. மேலும் முதல் விசாரணை அதிகாரி விபத்து நடந்த இடத்திற்கு சற்று முன்பு வேகத்தடை ஒப்புக்கொண்டுள்ள நிலையில் எதிரி வாகனத்தை வேகமாக இயக்க வாய்ப்பு இல்லை. எதிரி எந்த நான்கு சக்கர வாகனத்தை முந்தி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்ற விபரம் அ.சா.1ன் தரப்பில் குறிப்பிடவில்லை என்றும், மேலும்விபத்தைக் கண்ணுற்ற சாட்சிகளும் நான்கு சக்கர வாகனத்தை முந்தி வந்து விபத்து ஏற்பட்டதாக குறிப்பிடவில்லை. இந்த வழக்கில் எதிரிக்கும் பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றுள்ள நிலையில் அரசு தரப்பில் மேற்படி விபரத்தை குறிப்பிட்டு மருத்துவரை விசாரணை செய்யவில்லை.

17. மேலும் அ.சா.1ன் வாகனமானது விபத்து நடந்த சுமார் 6 மாதங்களுக்கு பிறகு மோட்டார் வாகன ஆய்வாளரால் ஆய்வு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி வாகனத்தில் காணப்பட்ட சேதாரங்களையும் மேற்படி எதிரியின் பெயரில் உள்ள வாகனத்திற்கு ஓட்டுநர் உரிமமும், வாகன பதிவு சான்றும், வாகன காப்பீடு சான்றும் இல்லாத நிலையில் எதிரியின் வாகனத்திற்கு பின்புறப் பகுதியிலும், அ.சா.1ன் வாகனத்தின் முன்புற பகுதியிலும் சேதாரம் ஏற்பட்டுள்ளதைப் பார்க்கும்போது அ.சா.1 தான் மோட்டார் வாகன விதிகளுக்கு மாறாக வாகனத்தை ஓட்டத் தெரியாமல் தாமாக ஓட்டிவந்து எதிரி மீது மோதி விபத்து ஏற்பட்டு இருவருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. எனவே இந்த விபத்திற்கு எதிரியின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை காரணம் இல்லை என்பது விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியத்தின் மூலம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

18. முடிவாக, எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279, 338ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(1)ன் கீழ் விடுதலை செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

19. எதிரி இந்நீதிமன்றத்திற்கு எழுதிக் கொடுத்த பிணை பத்திரம் இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் இரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்பட்டு ஆஜர்படுத்தப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழைதிருத்தம் செய்து, இன்று 2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 05ம் தேதி என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.05 17:38:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், எழுமாத்தூர் கிராமம்,
மொடக்குறிச்சி வட்டம்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.குமார் – புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.சூர்யா |
| அ.சா.3 | திரு. அக்பர் அலி |
| அ.சா.4 | திரு. ராஜா |
| அ.சா.5 | திரு. பாலாஜி –தலைமைக் காவலர் |
| அ.சா.6 | திரு. பிரகாசம் – உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| அ.சா.7 | திரு. பிரபாகரன் – உதவி ஆய்வாளர் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 | 17.08.2021 | புகார் வாக்குமூலம் |
| அ.த.சா.ஆ.2 | 17.08.2021 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.3 | 17.08.2021 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4 | 17.08.2021 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.5 | 06.09.2021 | ராயல் என்பீல்டு வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை |
| அ.த.சா.ஆ.6 | 10.02.2022 | ஹோண்டா ஸ்பிலண்டர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை |
| அ.த.சா.ஆ.7 | 17.08.2021 | குமாரின் காயச்சான்றிதழ் |
| அ.த.சா.ஆ.8 | 17.08.2021 | சட்டப் பிரிவு மாறுதல் அறிக்கை |

**<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்றுபொருட்கள்</u>:-**

**- இல்லை -**

<u>பிற்சேர்க்கை</u> :-

1) வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2) வழக்கின் விசாரணை காலத்தில் எந்த ஒரு சாட்சியும் 3 நாட்களுக்கு மேல் விசாரணையின்றி நிறுத்தி வைக்கப்படவில்லை.
3) வழக்கின் முடிவு அரசு தரப்புக்கு தெரிவிக்கப்பட்டது.

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2026.06.05 17:38:42 +05'30'

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், எழுமாத்தூர் கிராமம்,
மொடக்குறிச்சி வட்டம்.